**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No.77 of 2020

Deposition of P.W. 1

Name of the Witness: திரு.கணேசன்

Date : 04.08.2025

***1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

சொத்து என் அப்பா எழுதிய உயில் படி எனக்கு கிடைக்க வேண்டும் என்று வழக்கு போட்டுள்ளேன். 1, 2 பிரதிவாதிகள் என்னுடைய சகோதரர்கள், 3, 4 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் மகன்கள். என் அப்பா 1992ல் உயில் எழுதி வைத்துள்ளார்கள். எனக்கும் 1, 2 பிரதிவாதிகளுக்கும் உயில் எழுதி வைத்துள்ளார். உயில் படி எனக்கு சொத்து வேண்டும் என்று கேட்கிறேன். சர்வே எண் 244/1ல் உயில் படி எனது அனுபவத்தில் உள்ளது. அதில் உட்பிரிவு உள்ளது, சரியாக தெரியவில்லை. என் அப்பா 19.03.1983ம் தேதி என் அப்பா 10 சென்ட் நிலம் 1ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 25.6.1985ல் எனக்கும், 1, 2 பிரதிவாதிகளுக்குள் பாகபரிவினை ஏற்பட்டது என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் என் அப்பாவின் முதல் மனைவியின் மகன் சுப்பிரமணியும் ஒரு தரப்பினர். என் அப்பா 1995ல் இறந்தார். என் அப்பா இறக்கும் வரை 1ம் பிரதிவாதி தான் அவரை பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல.

*2)* தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் *52/1998* ன் Suit Register Extract நகல் ***வா.சா.ஆ.12*** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கை நானும் ராஜாமணியும், சுப்பிரமணி, அன்பழகன், செல்வம், மூர்த்தி ஆகியோர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏ செட்டியூல் சொத்து ராஜாமணி பெயரிலும், பி செட்டியூல் காந்தனுக்கும், சி செட்டியூல் சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய தாவாவில் இந்த ஆவணத்தை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு ஒதுக்கப்பட்ட சி செட்டியூல் சொத்தின் அளவு சர்வே எண் *244/1*ல் *22* சென்ட்டும், *2960* சதுரடியும், *1014* சதுரடியில் ஒரு வீடும் ஒதுக்கப்பட்டது. அந்த வழக்கில் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை தான் நான் இந்த வழக்கில் காட்டியிருக்கிறேன்.

*3)* அசல் வழக்கு எண் *52/1998*ல் ராஜாமணிக்கும், காந்தனுக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களை நான் இந்த வழக்கில் காட்டவில்லை என்றால் சரிதான். *1*ம் பிரதிவாதி *1985*ல் *90*சென்ட் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல, அவருக்கு பாகமாக ஒதுக்கப்பட்டது. *1991*ல் என் அப்பா *1*ம் பிரதிவாதிக்கு ஒரு ஏக்கர் *60* சென்ட் விற்றுள்ளார் என்றால் சரியல்ல.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒதுக்கி வைக்கப்படுகிறது)*